30th November 1970]

சேர்ந்தவர்கள் என்று இந்தச் சலுகை மறுக்கப்படுகிறது. ஆகையால் பெற்றோர்கள் இந்து, கிறிஸ்தவர் ஆகிய இரண்டு மதத்தைச் சேர்ந்த வர்களாக இருந்தால், அவர்களுக்கு இதனால் பாதகம் ஏற்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாகவே அப்படிப்பட்ட சிக்கல்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் தகப்பனார் எந்த சமயத்தைச் சேர்ந்தவரோ அந்த சமுதாயத்தின் அடிப்படையில்தான் அவர்களுக்கு பிறக்கிற பிள்ளைகளுக்குச் சொத்துரிமை வழங்கப்படுகிறது. அந்த அடிப்படையில் கலப்புத் திருமணங்களில் தகப்பனார் மதத்தை ஒட்டி அந்தச் சலுகைகள் வழங்கப்படும்.

திரு. டி. சந்தோஷம் : மதம் மாறிய காரணத்தால், பொருளாதார நிலை அவர்களுக்கு மாறுவதில்லை. மேலும் தீண்டப்பெருதவர்களாகவே ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது என்றும் ஒப்புக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ மதம் ஜாதியை ஏற்றுக்கொள்வதில்லை. கேரள அரசு செய்திருப்பது போல, ஏழு தலைமுறை என்று அவர்கள் செய்திருப்பதைப்போலச் செய்யா விட்டாலும் இரண்டுக்கும் நடுநிலையாக ஐந்து தலைமுறையில் உள்ளவர்களுக்கு, பொருளாதார நிலை மாருத நிலையில் இருப்பவர்களுக்கு, சேரியில் வாழ்கிறவர்களுக்கு, அந்தக் கிறிஸ்தவ அரிஜனங்களுக்கு இந்தச் சலுகை கிடைக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாக கேரளத்தில் மதம் மாறிய அரிஜனங்களின் நிலைமை எப்படியிருக்கிறது என்று தெரியாது. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே பல்லாண்டுகளுக்கு முன்பே மதம் மாறிய கிறிஸ்தவர்கள் அந்த மதத்தின் அடிப்படையில் தரப்படுகிற சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நடத்திய கல்விக் கூடங்களில் பங்குபெற்றிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மிஷன்கள், கதோலிக் மிஷன்கள் மூலமாக பிரத்யேகமாக மதம் மாறத்தான் வேண்டுமென்று பிரசாரம் செய்து அப்படி மதம் மாறியவர்களுக்குச் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். மதத்தின் அடிப்படையில் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில் மதம் மாறியவர்களுக்குப் பிரத்யேகச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலானவர்கள் படிப்பிலும் பொருளாதார நிலையிலும் அந்த வகையில் உயர்ந்திருக்கிறார்கள். திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இந்துக்களைவிட கிறிஸ்தவ அரிஜனங்கள் அதிகமாகப் படித்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிற காரணத்தாலும் தான் நமது மாநில அரசு இதைப்பற்றி வேறுவிதமான முடிவை எடுக்கமுடியாத சூழ்நிலையில் இருக்கிறது.

*Small, Scale Industries*

*22. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Small Scale Industries are in difficulties due to non-availability of raw materials such as Pig Iron, B.P. Sheets and non-ferrous metals at fixed prices ; and

(*b*) if so, the action taken by the Government in this matter ?

[30th November 1970

## சிறு தொழில்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தேனிரும்பு, இரும்பு கலவாத உலோகங்கள், பி.பி. தகடுகள் போன்ற மூலப் பொருள்கள் நிர்ணய விலைகளில் கிடைக்காத காரணத்தால் சிறு தொழில்களுக்கு இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், இது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) அவைமுன் விவர அறிக்கை† ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

THIRU S. NARAYANASWAMY : May I know whether the Hon. Minister is aware that several small-scale industrial units work for one-fourth or even less of their capacity and one-fourth of time both here and elsewhere and particularly, in the mofussil owing to acute shortage of not only steel, pig iron, and strips, G.I. sheets and such other materials but also for want of metals like aluminium and copper which are in acute short supply, and that this is leading to uneconomic production in most of these units ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சிறு தொழில்கள் மட்டுமல்ல, பெரிய தொழிற்சாலைகள்கூட தமிழ் நாட்டில் மட்டுமின்றி மற்ற மாநிலங்களிலும் இது போன்ற மூலப் பொருள்கள் கிடைக்காத காரணத்தால் அடிக்கடி 'லே ஆப்' கொடுக்கிற சூழ்நிலை ஏற்பட்டு, அதன் விளைவாக உற்பத்தியே குறையக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பாக, சிறு தொழில்களுக்கு இந்த இடையூறு அடிக்கடி ஏற்படுவதை இந்த அரசாங்கம் மத்திய அரசுக்குச் சுட்டிக் காட்டியது. அதற்காக, சிறு தொழில்களுக்காக என்று தனியாக ஒரு 10 கோடி ரூபாய்க்கு மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவது என்று கொள்கை அளவில் மத்திய அரசு முடிவெடுத்திருக்கிறது. அதன் காரணமாக ஓரளவு இடர்ப்பாட்டைக் குறைக்க முடியும் என்றுதான் கருதுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, அண்மையில் சிறு தொழில்கள் செய்யும் நம் மாநிலத்தில் உள்ள இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுகளுக்கும் கேரளத்தில் உள்ள இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுகளுக்கும் நமது மதிப்பீட்டுக் குழு சென்றிருந்தது. அப்போது அநேகமாக எல்லா சிறு தொழில் நிறுவனங்களுக்கும் மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை என்றும், அதனுல் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும், இதற்கு ஏதேனும் ஒரு வழி செய்ய வேண்டும் என்றும் மதிப்பீட்டுக் குழுவிடம் தமிழ் நாட்டைச் சார்ந்த

† Printed as Appendix

30th November 1970]

சிறுதொழில் அதிபர்கள் கேட்டார்கள். ஆனால் அதே கேள்விக்கு, கேரளத்திற்குச் சென்றபோது, திருவனந்தபுரம் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் இருப்பவர்கள், ''எங்களுக்கு அந்தக் கஷ்டம் இல்லை; அதற்கென்று ஒரு போர்டு இருக்கிறது. அவர்களே எங்களுக்குத் தேவையான எல்லா மூலப்பொருள்களையும் தருவித்து பிரித்துக் கொடுப்பதால் எங்கள் தொழில் கஷ்டமில்லாமல் நடக்கிறது'' என்று சொன்னார்கள். எனவே, கேரளத்தில் நடக்கிற நடைமுறையைப் பற்றி கேட்டறிந்து, அதைப்பற்றி இங்கே நமது அரசாங்கமும் பரிசீலனை செய்து, நமது மாநிலத்தில் உள்ள சிறு தொழில்கள் பாதிக்கப்படாத வகையில் மூலப் பொருள்கள் கிடைக்க, அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மூலப்பொருள் பற்றுக்குறை இல்லை என்று இந்திய நாட்டின் எந்தப் பகுதியிலாவது சொல்லியிருந்தால், அது வியப்புக்குரிய செய்திதான். இன்றையதினம் மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டு, சிறு தொழில்களுக்காக வென்றே 10 கோடி ரூபாய் அளவிற்கு இறக்குமதி செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மூலப் பொருள்களைப் பிரித்துக் கொடுப்பது என்பதை இது வரை இலாக்காவே செய்து வந்தது. அது அவ்வளவு பொருத்தம் உள்ளதாக இருக்காது, அதனுடன் சிறு தொழில் அதிபர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுகிறார் என்று நினைக்கிறேன். நம் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அந்த கொள்கையை ஏற்றுக் கொண்டு அண்மையில்தான் சிறு தொழில் வளர்ச்சி வாரியம் ஒன்றை நிறுவி அதில் தனிப்பட்ட சிறு தொழில் அதிபர்களையும் உறுப்பினர் களாகப் போட்டு, நம் அரசு அலுவலரைச் சேர்மனாகப் போட்டு அந்த வாரியத்திடம் சிறு தொழில் அதிபர்களுக்கு மூலப் பொருள்களைப் பிரித்துக் கொடுக்கும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம். அண்மையிலேதான் இந்தப் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற குறைபாட்டையும், நிர்வாகத்தில் உள்ள சாதாரணத் தடைகள் காரணமாக மூலப் பொருள்கள் கிடைக்காது இருக்கிற சூழ்நிலையையும் தவிர்க்க முடியும் என்று கருதுகிறேன். பொதுவாக மூலப் பொருள் பற்றுக் குறை உண்டு என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : எஸ்டிமேட் கமிட்டி சென்ற முறை பம்பாய்க்குச் சென்றிருந்தபோது, நானும் உடன் சென்றிருந்தேன். அப்போது அங்கேயுள்ள ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ் அதிபர்களைச் சந்தித்துக் கேட்டபோது, தங்களுக்கு பம்பாய் சர்க்காரே தேவையான மூலப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதோடு தங்கள் தொழில்கள் சரிவர நடக்கவில்லை என்றாலும், அதன் காரணமாக அந்தத் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகிற பொருள்களையும் மூலப் பொருள்களின் மதிப்பிற்கு பதிலாக வாங்கிக்கொள்ளுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். எனவே நமது ஆட்சியாளர்களும் இது குறித்துச் சிந்தித்து, நமது மாநிலத்தில் உள்ள சிறு தொழில்கள் நசித்துப் போகாமல் வளர அங்கே உற்பத்தியாகிற பொருளையும் அரசினரே வாங்கும் வகையில் ஏதாவது வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[30th November 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் பம்பாய்க்கு எஸ்டிமேட் கமிட்டியோடு போகவில்லை. ஆனால் தொழிலைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது தான் இந்தத் தகவலேகூட எனக்குக் கிடைத்தது. சிறு தொழில் வளர்ச்சிக்காக என்று ஒரு தனி வாரியத்தை அமைத்து, அதன் மூலமாக உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்வதற்கும், மூலப் பொருள்களைத் தேடிக் கொடுப்பதற்கும், உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் தொடர்பு கொண்டு அந்த வாரியம் உதவி செய்து வருவதை நான் அறிந்தேன். அதற்குப் பின்னால்தான் நம் மாநிலத்தில் அம்மாதிரியான வாரியம் ஒன்றைத் துவக்க வேண்டும் என்று முடிவெடுத்துத் துவக்கியிருக்கிறோம். மூலப் பொருள் பற்றாக் குறையைவிட அதைப் பகிர்ந்து கொடுப்பதில் தொல்லைகள் இருக்கக் கூடாது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்துதான் இந்த முடிவை எடுத்தது. கல்கத்தாவில் உள்ள ஜே. பி. சி. என்கிற ஜாயிண்ட் பிளானிங் கமிட்டியில் மூலப் பொருள்களை எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்று முடிவெடுக்கும்போது, அப்படிப்பட்ட மூலக் கொள்கையை மத்திய அரசு வகுக்கும்போது மாநில அரசுக்கும் அதில் ஓரளவு பங்கிருக்க வேண்டும்; அவர்களையும் சேர்த்துக் கொண்டு எப்படி மூலப் பொருள்களை விநியோகிப்பது என்று முடிவெடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசு அதனை இது வரையில் ஒப்புக்கொள்ளவில்லை. மூலப் பொருள் பற்றாக்குறையைப் பற்றி மத்திய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்ற நம் கருத்துக்கு, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களும் பேருதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். மத்திய அரசிடம் நாம் சொல்லுகிறபோதெல்லாம் இதைச் சொல்லிவருகிறோம். இந்த மூலப் பொருள் கிடைக்காமல் கஷ்டப்படுகிற நிலைமை என்பது சிறு தொழில்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கம் கட்டுகிற கட்டிடங்களுக்கே கூட மூலப் பொருள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அரசாங்கக் கட்டிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவைகளுக்குத் தேவையான மூலப் பொருள் தற்போது இல்லாமல் இருக்கிறது. அதே போல் மின்சார வாரியம் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்குக்கூட மூலப் பொருள் இல்லை. இதைப்பற்றி இந்தியப் பிரதமரிடம்கூட சொல்லியிருக்கிறோம். திட்டத்திலே கோளாறு இருப்பதை நிச்சயம் உணர்ந்தாக வேண்டும் என்று வலியுறுத்திய பிறகு, இப்போது வெளிநாட்டிலிருந்து ஓரளவு இறக்குமதி செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

### *Standard Motor Factory, Vandalur*

*23. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government propose to run the Standard Motor Factory, Vandalur as a State Government Enterprise ; and

(*b*) if so, the details thereof ?